**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.**

**அ.வ.எண்.33/2025**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31 –** ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **31.10.2025** |
| **பெயர்** | **செல்வராஜ்** |
| **த/பெ** | **சிதம்பரம்** |
| **சாட்சி** | **PW1** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 04.43.p.m**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி –**

அப்துல்சலாமின் பிள்ளைகள் ஜமால் அப்துல்லா காக்கி, ஜமால் மொய்தின், முகமத் ஜக்ருதின் என 3 மகன்களும் உம்மே ஜமில் என ஒரு மகள் என்றால் சரிதான். மேற்கூறிய லைலாசலாமின் வாரிசுகளக்கு சொந்தமானது தான் வழக்கு சொத்து என்றால் சரிதான். அவர்கள் மீது தான் இவ்வழக்கின் பிரதிவாதிகள் வேறு ஒரு வழக்கு தொடுத்திருந்தார்கள் என்றால் சரிதான். இரண்டு வழக்குகள் தொடுத்திருந்தார்கள் என்றால் சரிதான்.

அவற்றில் அசல் வழக்கு எண் 197/2005 திருவொற்றியூர் உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கானது சட்டரீதியாக காலி செய்யப்படும் வரை தங்களை இடையூறு செய்யாமல் இருக்க நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இருந்தது என்றால் சரிதான். ஆனால் நான் வில்லங்கம் பார்க்கும்போது அவ்வாறு உறுத்துக்கட்டளை எதுவும் இல்லாத காரணத்தினால் தான் நான் கிரையம் பெற்றேன்.

மற்றொரு அசல் வழக்கு எண் 161/2007 திருவொற்றியூர் உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கானது அவர்கள் தாவா சொத்தை காலி செய்யும் வரை எந்த பாராதீனமும் செய்யக்கூடாது என தாக்கல் செய்யப்பட்டு இருந்தது என்றால் சரிதான். மேற்கூறிய இரு வழக்குகள் குறித்த விவரங்கள் நான்

கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்துவதற்கு முன்பே எனக்கு தெரியும் என்றால் சரிதான். அவ்வாறு அந்த விவரங்கள் தெரிந்ததால் தான் அந்த வழக்குகளில் என்னையும் தரப்பினராக சேர்க்க கோரி வா.சா.ஆ–6 ஆவணம் மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

மேற்சொன்ன மனுவானது விசாராணையின் பெயரில் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு சென்றேனா என்றால் செல்லவில்லை ஆனால் ஸ்வாதீனம் ஒப்படைக்க கோரி அசல் வழக்கு எண் 298/2014 தாக்கல் செய்தோம். வா.சா.ஆ 6 மனுவானது அசல் வழக்கு எண் 197/2005 ல் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ 6 ஆவணத்தில் பத்தி 8–ல் அசல் வழக்கு எண் 161/2007 ல் தனியாக மனு போடவுள்ளதாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான்.

அதேபோல் அசல் வழக்கு எண் 161/2007 என்னை தரப்பினராக சேர்க்க கோரி ஏதேனும் மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் நினைவில் இல்லை. வா.சா.ஆ 6ல் கிரைய ஒப்பந்தத்தில் கையெழுத்தான தேதி 02.06.2006–ல் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனவே தாவா சொத்து குறித்து கிரைய ஒப்பந்தம் ஏற்பட்ட தேதி 02.06.2006 என்றால் சரிதான். வா.சா.ஆ 6 2011ல் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ 6 தாக்கல் செய்த தேதியில் கிரைய தொகையில் பகுதியாக ரூ. 43,72,000 என ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரிதான்.

02.06.2006 தேதியிட்ட விக்கிரைய ஒப்பந்தம் நிர்ணயிக்கப்பட்ட கிரைய தொகை ரூ. 99,00000 என குறிப்பிட்டுள்ளது என்றால் நான் பதில் அளிக்க விரும்பவில்லை.

**(மேலும் குறுக்கு விசாணை செய்ய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**

**விசாரணை முடியும் நேரம். 05.11.p.m.**